[பேரவைத் தலைவர்] [2013 பிப்ரவரி 4

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)

2. இரங்கல் தீர்மானம்

திரு. ஐ.கே. குஜ்ரால், இந்திய முன்னாள் பிரதமர் அவர்கள் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இந்திய நாட்டின் முன்னாள் பிரதமர் திரு. ஐ.கே. குஜ்ரால் அவர்கள் மறைவு குறித்த இரங்கல் தீர்மானம்.*

"சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்ட குடும்பத்தில் பிறந்து மாணவப் பருவத்திலேயே அரசியலில் ஈர்க்கப்பட்டு, 1942 ஆம் ஆண்டு நடைபெற்ற 'வெள்ளையனே வெளியேறு' இயக்கத்தில் பங்கேற்று நாட்டின் விடுதலைக்காகப் போராடி சிறை சென்றவரும், அர்ப்பணிப்பு, நேர்மை, தேசப்பற்றுடன் இந்திய நாட்டுக்காக சேவையாற்றியவரும், சிறந்த கவிஞரும், ஓவியருமான திரு. ஐ.கே. குஜ்ரால் அவர்கள் தனது 92-வது வயதில் 30-11-2012 அன்று மறைவுற்றது குறித்து இப்பேரவை அதிர்ச்சியும், ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.

இவர் பாராளுமன்ற மக்களவை மற்றும் மாநிலங்களவை உறுப்பினராகவும், சோவியத் ரஷ்யாவிற்கான இந்தியத் தூதராகவும், வெளியுறவுத் துறை மற்றும் தகவல் ஒலிபரப்புத் துறை அமைச்சராகவும், 1997 ஏப்ரல் முதல் 1998 மார்ச் வரை இந்திய நாட்டின் 12-வது பிரதமராகவும் பணியாற்றினார். இவர் வெளியுறவுத் துறை அமைச்சராகப் பணியாற்றியபோது அண்டை நாடுகளுடன் சுமுக உறவுக்கு கோட்பாடுகளை வகுத்து புகழ்பெற்றார்.

அன்னாரது மறைவால் அவரைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்ினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் இப்பேரவை தெரிவித்துக்கொள்கிறது."

இந்த இரங்கல் தீர்மானத்தை நிறைவேற்றுமுகத்தானும், மறைந்த இம்மாமனிதருக்கு மரியாதை செலுத்தும் வகையிலும் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

2013 பிப்ரவரி 4] [பேரவைத் தலைவர்]

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காத்ததன்மூலம் தீர்மானம் நிறைவேற்றப்பெற்றது.)

மறைந்த இப்பெருந்தகைக்கு மரியாதை செலுத்தும் வகையில், பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் ஒத்திவைக்கப்படுகின்றன.

பேரவை மீண்டும் நாளை (5-2-2013) செவ்வாய்க்கிழமை காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை முற்பகல் 10-08 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

3. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

1. 2011 ஆம் ஆண்டு தமிழ்நாடு குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமை விதிகள் இயற்றியது குறித்து பள்ளிக் கல்வி (சி2) துறையின் 8-11-2011 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 173-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2009 ஆம் ஆண்டு குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 35/2009) 38(4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

2. சென்னையிலுள்ள தமிழ்நாடு விற்பனை வரி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்திற்கு (கூடுதல் நடுவர் ஆயம்) கூடுதல் உறுப்பினர் (நீதிமுறை) நியமித்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவு (இ2) துறையின் 31-7-2012 ஆம் நாளிட்ட அரசாணை (2டி) எண் 148-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 80(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

3. சென்னையிலுள்ள தமிழ்நாடு விற்பனை வரி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்திற்கு தலைவர் நியமித்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவு (இ2) துறையின் 19-6-2012 ஆம் நாளிட்ட அரசாணை (3டி) எண் 14-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 80(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]